1973 டிசம்பர் 1]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இத்திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : எந்தெந்த வாய்க்கால்கள் சீரமைக்கப்பட்டு வருகின்றன? போடப்பட்டுள்ள மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசு சிறப்பு சிறிய நீர்ப் பாசனத் திட்டத்தின்கீழ் ரூ. 13,12,850-க்கு அங்கீகாரம் அளிக்கப் பட்டிருக்கிறது. 11 கால்வாய்களில் 1969-ல் 7 கால்வாய்களும், 71-ல் மீதமுள்ள 4 கால்வாய்களிலும் வேலை துவங்கப்பட்டுவிட்டது. அந்த 7 கால்வாய்களில் 75 சதவிகிதம் வேலை முடிந்துவிட்டது. மீதம் இருப்பதில் 45 சதவிகிதம் நடந்திருக்கிறது. தாமதத்திற்குக் காரணம் ஆற்றில் தண்ணீர் விடுகிற வேலை செய்யும் நாட்கள் குறைவான நாட்களாகும். அதனால் வேலை தாமதப்பட்டிருக்கிறது. இருந்தாலும் 1975-க்குள்ளாக இவற்றை முடிக்கவேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அமராவதி ஆற்றின் கிளையில் ஏராளமான கால்வாய்கள் இருக்கின்றன. அதில் 11 கால்வாய்களில் வேலை முடிந்துள்ளதா? முடிய இருக்கிற கால்வாய்கள் எவ்வளவு? என்ற விவரங்களைக் கேட்டேன். அதற்குப் பதில் இல்லை. அது பற்றிய விவரங்களை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 11 கால்வாய்கள் உள்ளன என்று தகவல் தெரிவித்தேன். ஏழு கால்வாய்களில் வேலை 69-ல் துவங்கப்பட்டது என்று தெரிவித்தேன். நான்கு கால்வாய்களில் வேலை 71-ல் துவங்கப்பட்டது என்று தெரிவித்தேன். பதினொன்றிலும் வேலை துவங்கப்பட்டதாகத் தகவல் இருக்கிறது. பெயர்கள் வேண்டுமானால் தனிக் கேள்வி வேண்டும். அதுபற்றி என்னிடம் இப்போது தகவல் இல்லை.

நங்கனி ஆற்றின் குறுக்கே பாலம்

*** 549 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சி—கரூர் நெடுஞ்சாலையில் நங்கனி ஆற்றின் மீது தற்போது அமைந்துள்ள படுக்கை பாலத்திற்கு **(cause way)**

பதில் மேம்பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: நங்கனி ஆற்றில் வெள்ளம் வரும்போது தரையோடு தரையாக இருக்கக்கூடிய இந்த காஸ்வே மீது வெள்ளம் போகும்போது போக்குவரத்து தடைப்படுகிறது. ஆகவே அந்த காஸ்வேயை—அது ஒரு சிறிய காஸ்வே—அதனால் அதிகச் செலவாகாது—ஒரு மேம்பாலமாகக் கட்டுவதற்கு இனி யாவது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாற்றுப்பாதை ஒன்றிருக்கிறது. அதன்மூலம் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் நடைபெற்று வருகிறது. அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது போல் கட்டவேண்டுமென்றால் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து அரசாங்கத்தினிடம் அதை ஒப்படை செய்யவேண்டும். அப்படிச் செய்த பிறகு தமிழ்நாடு அரசாங்கத்தின் சொந்த நிதியிலிருந்து செய்ய வேண்டியிருக்கிறதால் நிதிநிலையை கருத்தில் கொண்டு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை மனதில் கொண்டு பின்னால் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன்: இரண்டு மாநிலங்களுக்கிடையே உள்ள பொருளாதார உறவுகளை ஊக்குவிக்கிற வகையில் அத்திட்டத்தின் கீழ் பல திட்டங்களை தமிழ்நாடு உருவாக்கி இந்திய அரசின் ஒப்புதலுக்காக சென்ற மார்ச் அனுப்பப்பட்டு மாதங்கள் எட்டு ஆயினும் இன்னும் மத்திய அரசிடமிருந்து அதற்கான ஒப்புதல் வரவில்லையென்று தலைமைப் பொறியாளர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே நம் அரசு . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா, நங்கனி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதுபற்றியது.

THIRU A. PARANDHAMAN: In connection with that only, I am asking.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை எப்படி அதன்கீழ் கொண்டுவர முடியும்?